பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper


# உதயன்

விலை ரூபா 3-50

சுடர் 5 | பிரமோதூத ஹு புரட்டாதி மீ 05 உ வெள்ளிக்கிழமை (21-09-1990) | ஹிஜ்ரி 1410 ற அவ்வல் 1 | கதிர்: 201


# குடாநாட்டில் பல இடங்களில் நேற்று விமானத் தாக்குதல்!

## சொத்துக்களுக்கு பெரும் சேதம்

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 21

யாழ். குடாநாட்டில் நேற்று முழுவதும் பரவலாக பல இடங்களிலும் விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

இதனால் பொதுமக்களின் சொத்துக்களுக்கு பெரும் சேதம் ஏற்பட்டது.

உடுவில், நீர்வேலி, கோப்பாய், மயிலிட்டி, கட்டுவன், யாழ்நகரம் உட்பட பலஇடங்களில் பொம்மர்களும், அவ்ரோ விமானமும் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

திடீர் திடீரென நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல்களினால் அவ்வப்பகுதி மக்கள் பதற்றமடைந்தனர்.

விமானச் சத்தம் கேட்டதும் பொதுமக்கள் பதுங்கு குழிக்குள் தஞ்சம் புகுந்துகொண்டதால், பல இடங்களில் விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றபோதிலும், உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டன. (உ)

## நீர்வேலியில் பொம்மர் தாக்குதல்; கண்ணாடி தொழிற்சாலை சேதம்

நீர்வேலியில் இடம்பெற்ற குண்டு வீச்சில் கண்ணாடித் தொழிற்சாலை ஒன்று சேதம் அடைந்தது.

நேற்று வியாழன் பகல் 12 மணி அளவில் இச்சம்பவம் இடம் பெற்றது.

இரு பொம்மர்கள் இத் தாக்குதலை நடத்தின.

இத்தாக்குதலில் தொழிற்சாலையின் களஞ்சிய அறை முழுதாகச் சேதமடைந்தது.

தொழிற்சாலையில் இருந்த பெறுமதி மிக்க உபகரணங்களும் சேதம் அடைந்தன. தொழிற்சாலைக்குச் சொந்தமான லொறி ஒன்றும் சேதமடைந்தது.

நேற்று முன்தினம் புதன் கிழமையும் இத்தொழிற்சாலைப்பகுதியில் இரு குண்டுகள் வீசப்பட்டன. எனினும் அவை வெடிக்கவில்லை.

நேற்று தாக்குதல் நடந்த சமயம் தொழிற்சாலை ஊழியர்கள் பத்துப்பேர் வரை தொழிற்சாலைக்குள் இருந்தபோதிலும் தெய்வாதீனமாக காயம் எதுவும் இன்றித் தப்பினர். [இ-72]

## கோப்பாயிலும் குண்டு வீச்சு

கோப்பாய், செப். 21

நேற்றுப் பகல் 11 45 மணி அளவில் கோப்பாயில் இடம்பெற்ற பொம்மர் தாக்குதலில் ஒருவர் சிறுகாயம் அடைந்தார். இருநூறுக்கும் மேற்பட்ட வாழைமரங்கள் சேதம் அடைந்தன.

கோப்பாய் சந்தியில் கைதடி பக்கமாக சுமார் 100 யார் தூரத்துக்குள் குண்டுகள் விழுந்து பெரும் ஓசையுடன் வெடித்தன.

இரு பொம்மர்கள் எதிர்பாராதவிதமாக இத் தாக்குதலை நடத்தியபோது கோப்பாய் சந்தியில் பெருமளவு மக்கள் நின்றனர். இவர்கள் பதுங்கு குழிக்கு ஓடுவதற்கு முன்னர் பொம்மர்கள் குண்டை வீசிவிட்டு ஓடி மறைந்தன.

இத்தாக்குதலின் போது அயலில் உள்ள வீடுகளின் யன்னல் கண்ணாடிகள் உடைந்தன. சில வீடுகளின் கூரை "சீற்று"களும் ஓடுகளும் சிதறின. (இ-72)

## உடுவில் கிழக்குப் பகுதியில் நெல் குற்றும் ஆலை சேதம்

யாழ்ப்பாணம், செப். 21

உடுவில் கிழக்குப் பகுதியில் நேற்றுப் பகல் 11-30 மணியளவில் இரு பொம்மர்கள் மேற்கொண்ட தாக்குதலில் நெல் குற்றும் ஆலை ஒன்று பலத்த சேதமடைந்தது.

சுன்னாகம் பகுதியைச் சுற்றி வட்டமிட்ட பொம்மர்களைக் கண்டதும் மக்கள் பதுங்குகுழிகளில் தஞ்சமடைந்தனர். இதனால் உயிரிழப்பு ஏற்படவில்லை.

நெல் குற்றும் ஆலையில் இருந்த இரண்டு மோட்டர்களும் சேதமடைந்தன. மாடு ஒன்றும் பலியானது. [உ-3-5-89]

## மயிலிட்டி, கட்டுவனில்

பலாலி விமானநிலைய சுற்றாடலில் மயிலிட்டி, கட்டுவன் பகுதிகளில் நேற்றுப் பகல் 11.45 மணியளவில் பொம்மர், அவ்ரோ விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

மயிலிட்டி உப- அலுவலகப் பகுதியிலும், கட்டுவன் பகுதியிலும் மாறிமாறி அவை தாக்குதல் மேற்கொண்டதில் பல வீடுகள் மற்றும் தோட்டங்கள் சேதமடைந்தன.

அந்தப் பகுதியில் இருந்து ஏற்கனவே மக்கள் இடம் பெயர்ந்திருந்ததால் உயிரிழப்பு தவிர்க்கப்பட்டது. (உ-68)

## கோட்டைப் பகுதியில் நேற்றிரவு கடும் மோதல்

யாழ்ப்பாணம், செப். 21

யாழ். கோட்டைப் பகுதியில் நேற்றிரவு 8.30 மணி முதல் பெரும் மோதல் இடம் பெற்றது.

"பரா" வெளிச்சக் குண்டுகள் ஏவிவிடப்பட்டு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

காதைப் பிளக்கும் வகையில் பீரங்கிக் குண்டுகள் நகரில் விழுந்து வடித்த வண்ணம் இருந்தன. ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன. சரமாரியாக வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன. (உ)

## அவ்ரோ குண்டு வீச்சு; நகரில் கடைகள் எரிந்தன

யாழ்ப்பாணம், செப். 21

யாழ். நகர மையப்பகுதியில் நேற்று பிற்பகல் 3 மணியளவில் அவ்ரோ எரிகுண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தியது.

முட்டாசுக் கடைச் சந்தியில் விழுந்து வெடித்த குண்டுகளினால், அப்பகுதியில் சில கடைகள் தீப்பற்றி எரிந்தன.

கொட்டடிப் பகுதியிலும் எரிகுண்டுகள் வீசப்பட்டன. இதனால் தொலைத்தொடர்பு கட்டடப் பின்பகுதியில் இருந்த சில வீடுகள் தீப்பற்றின. (ஒ-7)

## சவளக்கடையில் 35 தமிழர் கொலை!

யாழ்ப்பாணம், செப். 21

சவளக்கடை இராணுவ முகாமில் வைத்து கடந்த திங்களன்று 35 தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

அன்றைய தினம் மட்டக்களப்பு சொறிக்கல்முனை என்ற கிராமத்தை சுற்றி வளைத்த இராணுவத்தினரும் முஸ்லிம் ஊர்காவல் படையினரும் அங்கிருந்த 35 தமிழ் இளைஞர்களைக் கைது செய்து சவளக்கடை முகாமுக்குக்கொண்டு சென்று

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஆறு அகதிக் குழந்தைகள் வயிற்றோட்டத்துக்குப் பலி!

நெடுந்தீவு, செப். 21

தமிழ்நாடு கோட்டை பட்டணத்தில் உள்ள ஈழத் தமிழ் அகதிகள் முகாமில் தங்கியிருந்த நெடுந்தீவைச் சேர்ந்த ஆறு குழந்தைகள் வயிற்றோட்டம் காரணமாக இறந்துள்ளதாக அறியவருகிறது.

இதனையடுத்து அகதிகள் முகாம்களில் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (உ-111)

## தேங்காய் பிண்ணாக்கை வறுத்து பசி போக்கும் நெடுந்தீவு மக்கள்!

— நெடுந்தீவு உதயன் செய்தியாளர் —

இரண்டாவது உலக யுத்தத்தின் பின்னர் நெடுந்தீவில் இப்போது தான் மிக மோசமான உணவுத் தட்டுப்பாடும், பட்டினி நிலையும் ஏற்பட்டுள்ளது.

பசி தாங்காது வயோதிபர் ஒருவர் மரணமானதும் இதுவே முதற்தடவை.

நெடுந்தீவு மக்களில் பெரும்பாலானவர்கள் தமது வயிற்றுப் பசியைப் போக்குவதற்காக கால்நடைத் தீனியான தேங்காய்ப் பிண்ணாக்கை வறுத்துச் சாப்பிடுகிறார்கள். ஈச்சம் மரத்தின் குருத்தை வெட்டியும் அவர்கள் உண்கிறார்கள்.

மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தை

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

## தேவை

வேப்பம் விதை, இலுப்பம் விதை தேவை. மில்க்வைற்- யாழ்ப்பாணம்.

(C/ 5206)

## தவறிவிட்டது

யாழ் – செஞ்சிலுவைச் சங்க மானிப்பாய் கிளையில் பணியாற்றும் செல்வி. செ. நளாயினி தமது கைப்பையை சிந்தங்கேணி டச்சு வீதியில் தவறவிட்டுள்ளார். அவருடைய முக்கிய ஆவணங்கள் அந்தப் பையில் இருப்பதால், கண்டெடுப்பவர்கள் மானிப்பாய் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(14232)

18. 9 90 காலை முனீஸ்வரர் கோயிலில் எனது கருமையான பிறேமுள்ள மூக்குக் கண்ணாடி தவறிவிட்டது· தயவு செய்து கண்டெடுத்தவர்கள் கீழ் குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கவும். Dr. மு. சுவாமிநாதர் ஔடத தயாரிப்பாளர் C/o சிவாஜீ மெடிக்கல்ஸ் ஸ்ரோஸ் சுன்னாகம் தகுந்த சன்மானம் வழங்கப்படும். [14238]

## டில்கா வாச் வேக்ஸ் [Dilka Watch Works]

வாடிக்கையாளரின் வசதிக்கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி ஆனைக்கோட்டையில் (கிராம சபைக் கருகில்) நடைபெறுகின்றது. சகல மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலெக்றோனிக் கடிகாரங்களின் பற்றறிகளும் விற்பனைக்குண்டு. [14224]

## மீரா வெளியீடுகள்

சிறுவர்களுக்கும், பெரியவர்களுக்கும், 1989ல், 1990ல், வெளிவந்த உயிரோட்டமான நாவல்கள் 100/- ரூபாவுக்கு புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு 40 /-ரூபாவுக்குப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னாகம். ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர். [14236]

## இடமாற்றம்

அரஸ் ஜவுளியகம் இல: 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம் மண்டேலா ரேடர் (புத்தக சாலை) இல, 2. பஸ்நிலையம் ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம் ஆகியன தற்போது இல, 256, பருத்தித்துறை வீதி, (நல்லூர் தேரடி முன்பாக) நல்லூர் யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்குகின்றன என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். [13938]

## போட்டோஸ்ரற்

போட்டோஸ்ரற் பிரதி களைபெற்றுக் கொள்ள கிளீன் கட். 37, சிவகுருநாதன் வீதி, பிறவுண் வீதி யாழ்ப்பாணம். வேலை நேரம் 10 மணி முதல் 3மணி வரை. [14216]

## RATHY WATCH WORKS

மேற்படி ஸ்தாபனம் 12, பொன்னையா லேன் (உபதபால் நிலைய அருகாமையில் பிடாரி கோவிலடி) ஆறுகால் மடம் ஆனைக்கோட்டை யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் இயங்குகிறது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம். இங்கு திருத்த வேலைகள் மணிக்கூடு பற்றறி, விற்பனைகள் நடைபெறுகின்றது என்பதையும் அறியத்தருகிறோம். [13937]

## லண்டன் பரீட்சை

யாழ்· டியூட்டோரியல் கல்லூரியில் (J. T. C) லண்டன் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் 26. 9. 90 இற்கு முன்னர் காலை 9. 00 – 10. 00இற்கிடையில் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

[14237]

## மக்கள் வங்கி ஊழியருக்கு

யாழ்ப்பாணம், செப். 21 மக்கள் வங்கியின் நகரக் கிளைகளிலும் பிரதேச காரியாலயத்திலும் பணியாற்றும் ஊழியர்கள் அனைவரையும் நாளை 22ஆம் திகதி சனிக் கிழமை காலை 9 30 மணிக்கு யாழ். இந்து மகளிர்கல்லூரியில் சமுகம் அளிக்கும் படி பிரதேச முகாமையாளர்கோரி உள்ளார். (இ)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னையின் மடியில்: 26 | 07 | 1966



அநியாயத்தின் பிடியில்: 08 | 08 | 1990

### சுப்பிரமணியம் தயாளன்

வானகத்துப் பூதம் சீனச் சகடையின்
அநியாயக் குண்டினால் அகோரமாக்கப்பட்டே
இன்னுயிர் துறந்தான் – எங்கள் இனிய நண்பன்

●

அச்சகக் கலைதனை பத்திரமாய்ப் பழகி
பற்றுடனே பணி பல புரிந்தே ...
பல கலையும் பயின்றான் – எங்கள் இனிய நண்பன்

●

தயாளன் மிகத் தயாள குணத்தால்
நெடுநாள் நண்பனாய் – மிக
நெருக்கங்கொண்டான் – எங்கள் இனிய நண்பன்

●

விண்ணுலகு சென்றுவிட்ட – நண்பா
எங்கள் கண்ணிலே நீர் பனித்திட
கண்ணீர் அஞ்சலியால்
ஜனனிக்கின்றோம் - நண்பனுக்காக

— உதயன் ஊழியர்கள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்: 14 - 09 - 1907

விண்ணில்: 21 - 08 - 1990

### தலைமையாசிரியா: சி. சி. க. வாளரசன்

ஊனடைந்த உடல் நீத்து
உம்பருலகில் இன்பந்துய்க்க
தானடைந்த புகழனைத்தும்
தரணிதனில் நிலைநிறுத்தி
தேனடைந்த சோலைத் திருநாட்டைக்
கைவிட்டு இன்று
வானடைந்தார் வான்புகழ்
மேவிய வாளரசனாரே

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஈமச்சடங்கில் கலந்து பல் வகையிலும் உதவியும், மலர் வளையம், அனுதாபச் செய்திகள் வழங்கியும் ஆதரித்த அன்பர்களுக்கு எங்கள் குடும்பத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

மேலும் 21 – 09 - 90 இன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்தில் பங்கு கொண்டு மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி பொன்னார் அம்மா வாளரசன்.

263, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். [14226]

## அறிவித்தல்

### ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோயில்

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோவில் வருடாந்த மஹோற்சவம் நாட்டு நிலைமை காரணமாகப் பின் போடப்பட்டுள்ளது. நடப்பு வருடம் முடிவதற்குள் நிலைமையை அனுசரித்து மஹோற்சவம் நடைபெறும். இதுபற்றிய அறிவித்தல் பத்திரிகை வாயிலாக வெளியிடப்படும். விரதம் அனுஷ்டிப்போருக்காக 19 – 09 – 1990 தொடக்கம் 04 – 10 – 1990 வரை தினமும் காலை 9 30 மணிக்கு அபிஷேகமும் விசேஷ பூசையும் நடைபெறும்.

பரிபாலனசபை.

]14231)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பு: 21 – 03 – 1963

ஆழ்பவன் அழிப்பு: 08 - 08 - 1990

### பொன்னையா லோகநாதன்

[எம். ஜி. ஆர்.]

(ஞானேஸ்வரி விறகுகாலை ஊழியர்)

பழகிவந்த உனது முகம்
பாதியிலே மறைந்தாலும்
எழுதிவைத்த ஓவியம் போல்
இருக்கின்றாய் எம் மனதில்

பிரிவால் வாடும்:
முதலாளியும், உறவினர்களும்,
ஞானேஸ்வரி மரக்காலை.

50, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம். [14234]

## ஓராண்டு நினைவஞ்சலி

மனிதம் மரணித்தது

ஆக்கம்: 23 - 02 - 1954



அழிப்பு: 21 – 09 – 1989

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் உடற்கூற்றியல் தலைவர் வைத்திய கலாநிதி

### இராஜினி திராணகம

[M B. B. S (Cey.) P. H D (Liverpool)]

''நான் தனியொருவளாக மெழுகுதிரி போல் எரிந்து கொண்டேயிருப்பேன் யாரும் அணைக்கும் வரை''

இராஜினி.

- மருத்துவ பீட மாணவர்கள் -

மாணவர் கவனத்திற்கு! அன்னாரின் ஆத்மசாந்திக்காக மருத்துவப்பீடத்தில் 10 மணியளவில் பிரார்த்தனை நடைபெறும்.

[14240]

## முதலாண்டு நினைவஞ்சலி

### செல்லையா - அரியரத்தினம்

[ஓய்வு பெற்ற இலங்கை வங்கி உத்தியோகத்தர்]

தோற்றம்: 26– 11– 1926

மறைவு: 02– 10– 1989

தங்கள் ஆத்மா சாந்தியடைய எந்நாளும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திருமதி திரவியம் அரியரத்தினம்,
குடும்பத்தினர்.

இணுவில், (13862)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஒன்பதாவது படை எதற்காக?

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் எல்லைக் கிராமங்களைப் பாதுகாக்கப் புதிதாக 35,000 ஊர்காவலர்களைத் திரட்டுவதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது. ஆட்சேர்ப்புக்கான நடவடிக்கைகளும் முடுக்கி விடப்பட்டுள்ளன.

ஏற்கனவே 15,000 ஊர்காவல் படையினர் வடக்கு-கிழக்கில் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது தகவல். புதியவர்களையும் சேர்த்தால் மொத்தம் 50,000 ஊர்காவலர்கள் வடக்கு - கிழக்கில் உள்ள மக்களை, குறிப்பாக, எல்லைக் கிராமங்களில் வாழும் மக்களைப் பாதுகாக்கப் போகிறார்களாம்!

அரசாங்கம் மக்களைக் காப்பாற்றுவதற்கென ஏற்கனவே மூன்று பிரதான படைகளை வைத்திருக்கிறது. அவற்றுக்கு உதவியாகத் துணைப்படைகள்- தொண்டர் படைகள் - மூன்று. மேலும் சட்டத்தையும் ஒழுங்கையும் அமுல் செய்யும் பணியில் ஈடுபட வேண்டிய பொலீஸும் இங்கு ஒருபடையே. அதற்குத் துணைப்படையாக றிசேர்வ் படை என்ற ஒன்றும் உண்டு. இந்த எட்டுப் படைகளும் போதாவென்று ஒன்பதாவது ஆயுதப் படையாக ஊர்காவலர் படையையும் அரசு உருவாக்கப்போகிறது!

இதில் ஒன்பதாவது படை வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மட்டுமே பாதுகாப்புப் பணியில் ஈடுபடப் போகிறது. அதன் அர்த்தம் என்னவெனில், ஏற்கனவே உள்ள எட்டுப் படைகளாலும் வடக்கு - கிழக்கு மக்களைப் பாதுகாக்க முடியவில்லை என்பதுதான்!

அதுவும் ஒரு விதத்தில் பொருத்தமே, அதாவது அரசாங்கப்படைகள், வடக்கு-கிழக்கின் பெரும்பான்மையினரான தமிழர்களைப் பாதுகாப்பதற்குப் பதில் அவர்களின் பாதுகாப்பைக் கெடுத்து அவர்களை அழிப்பதில் தானே தீவிர கவனம் செலுத்தி வருகின்றன. அதனால் தான் 9வது படையை உருவாக்க அரசியல் மூளைகள் திட்டம் போட்டனவா? இல்லை.

வடக்கு-கிழக்கில் ஐம்பதினாயிரம் ஆயுதங்களை மேலதிகமாகப் புகுத்துவதற்காகத் (Inflow) தான் இந்த ஊர்காவற்படை. அந்த ஆயுத அதிகரிப்புக்கு சட்டபூர்வ மேலாடை போர்த்தி வடக்கு - கிழக்கில் நிரந்தர ஆயுத நாகரீகத்தை வளர்ப்பதே ஊர்காவல் படையை உருவாக்குவதன் உள்நோக்கம்.

ஊர்காவற்படை என்பது வடக்கு - கிழக்கில் நிரந்தர மோதலுக்கும் இரத்தக்களரிக்கும் தான் வழி செய்யும். 'அமைதி விரும்பும்' அரசியல் மூளைகளின் சிருஷ்டியின் நோக்கமும் அதுதான!

வடக்கு கிழக்கில் முஸ்லிம், சிங்கள, தமிழ் கிராமங்களைப் பாதுகாப்பதற்காகவே ஊர்காவல்படை என்று அரசு சொல்கிறது. ஆனால் எல்லைப் புறங்களில் உள்ள சிங்களக் கிராமங்களைக் காப்பதே அதன் பிரதான நோக்கம்.

அதன் பொருட்டு ஊர்காவல் படைக்கும் சிங்கள இளைஞர்களே அதிக எண்ணிக்கையில் சேர்க்கப்படுவர் என்பதே நடைமுறை உண்மையாகும்.

மொத்தத்தில் சிங்களவர்களை மேலும் ஆயுத மயப்படுத்தும் நடவடிக்கை இது.

# நான்கு ஜெனரேட்டர்கள் இருந்தும்

# எரிபொருள் இல்லாத நிலைமை

## மானிப்பாயில் அவசர சிகிச்சைகள் தாமதம்

யாழ்ப்பாணம், செப். 21
மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா வைத்தியசாலைப் பிரிவில் உள்ள ஜெனரேட்டர்களை இயக்க போதுமான எரிபொருள் இல்லை. இதனால் அவசர சத்திர சிகிச்சைகள் தாமதம் அடைகின்றன.

தற்போது வைத்தியசாலையில் இரு 27.5 கே. வி. ஜெனரேட்டர்களும் இரு 3 கே. வி., 2 கே. வி சிறிய ஜெனரேட்டர்களும் இருந்தும் எரிபொருள் பற்றாக் குறையினால் இச் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த ஜெனரேட்டர்களுக்கு தினமும் தேவையான எரிபொருளில் நாலில் ஒரு பங்கே தற்போது வழங்கி வரப்படுகிறது.

தொற்று நீக்கும் இயந்திரம் இயக்குவதற்கு மாத்திரமே தற்போது வழங்கப்படும். எரிபொருள் போதுமானதாக இருப்பதால் ஏனைய சேவைகள் ஸ்தம்பிதம் அடையும் நிலை உருவாகிறது.

தொற்று நீக்கும் இயந்திரம் இரண்டு நாட்களுக்கொரு தடவையே இயக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

(இ - 15)

## பொம்மர் தாக்கி லொறி சேதம்

பச்சிலைப்பள்ளி, செப். 21
சாவகச்சேரி, தனங்கிளப்பு பகுதியில் கடந்த வார இறுதியில் லொறி ஒன்றின் மீது பொம்மர் தாக்கியதில் அது பலத்த சேதமடைந்தது.

வெங்காயம், பீற்றூட் போன்றவற்றை ஏற்றிச் சென்ற லொறியே தாக்குதலுக்கு இலக்காகியது.

சாரதியும், உதவியாளரும் லொறியில் இருந்து இறங்கி ஓடியதால், தப்பி விட்டனர்.

(ஒ-117)

## நவாலி அகதி முகாம்களில் போதிய உணவு இல்லை

நவாலி, செப். 21
நவாலியிலுள்ள நான்கு அகதி முகாம்களில் தங்கியுள்ள 142 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 794 பேருக்கு வழங்குவதற்கு உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக அம் முகாம்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் இடம் பெற்று வரும் இராணுவ நடவடிக்கைகளினால் தமது வீடு வாசல்களை விட்டு இடம்பெயர்ந்து இங்கு தஞ்சமடைந்துள்ள இவர்களை நவாலி சிற்றூரவையும் மற்றும் பொது ஸ்தாபனங்களும் பராமரித்து வருகின்றன.

நவாலி மகாவித்தியாலயம் நவாலி அட்டகிரி பாடசாலை சின்னத்தம்பி முகாம், நவாலி சென் பீற்றேஸ் பாடசாலை தேவாலயம் ஆகியவற்றில் இவர்கள் தங்கி உள்ளனர்.

[இ-100]

## ஈழத்து வானம்பாடி

இனிமையும், எழிலும், லயமும், நயமும், கானமும், கம்பீரமும், அன்பும் நிறைந்த அந்தக் குரல் மறைந்துவிட்டது.

சரோஜினி நாயுடு மறைந்த போது ஒருவர் இப்படி எழுதியிருந்தார்;-

இப்போது இதே வரிகள் மீண்டும் நினைவுக்கு வருகின்றன.

1987 ஆம் ஆண்டு செப். 26 இம்மண்ணில் தமிழீழக்கானம் பாடிய இளம் குயில்; இந்த மண்ணை எள்ளளவும் சுயநலப்பற்றற்று ...ன் இனம், கொடுமைகளில் இருந்து விடுதலை பெற்று சுதந்திரக் காற்றை சுவாசிக்க வேண்டும் என்று ஒரே மூச்சுடன் ஓடித்திரிந்த ஒரு குரல்; தம் இனத்தின் ஓசையை உலகுக்கு கேட்க வைப்பதற்காக மூச்சை நிறுத்திக் கொண்டு விட்டது;

அழகான தெளிந்த எதிர்காலம் நோக்கும் கண்கள், தலைவாரிக் கொள்ளக்கூட நேரம் இல்லாமல் ஓடித்திரிந்த கால்கள்;

''தமிழினம், தமிழினம், தமிழீழம்'' எனக்குரல் எழுப்பிக் கொண்டிருந்த அந்த ஆழமான உதடும், கோடு போட்ட சேட் அழகுமிளிரும் உடற்கட்டு எல்லாமே......... இதனை எப்படி முடிப்பதென்றே மனம் விம்முகிறது!

கண்களே கண்ணில் நீர் உள்ள மட்டில் கதறி அழுங்கள் என்று அகிம்சைக்கான புதிய அத்தியாயத்தை ஆரம்பித்த அண்ணல் காந்தி அடிகள் அவர்கள் இறந்த செய்தி கேட்டு கல்கி எழுதி இருந்தார். இப் போது இனத்தின் வாழ்விற்காக, இனத்தின் விடுதலைக்காக தன்னையே தேய்த்துஅழித்து, மக்கள் எல்லோரையும் கண்ணீர் கடலினுள் விட்டுச் சென்ற தியாகத்துக்காக நாம் எப்படி அழுவது?

பேச முடியாதபடி எவரைப் பார்த்தாலும் பேயறைந்தவர் போலவே காணப்பட்டனர். அங்குமிங்குமாக விம்மல்கள் தேம்பி அழும் குரல்கள் கல்லாய்ப்போன மனசுகளை கரைய வைத்துக் கொண்டிருந்தனர் இதயம் வேகுகின்றது.

திலீபனுக்கு வயது எத்தனை? பலரது கேள்வி இது தான்;

இந்த வயதுக்குள் இத்தனை இனப்பற்றா? இத்தனை மொழிப்பற்றா? இத்தனை மண்பற்றா? வேறு நாடுகளில் தான் இப்படி நடக்கும். எங்கள் நாட்டில்... என்று வேடிக்கையாக கேட்டவர்கள் வாயடைத்துப் போய் இருக்கிறார்கள்.

தனது வாழ்வின் ஆரம்ப அத்தியாயத்தில் இன விடுதலைக்கான புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்திருக்கிறான் திலீபன்.

தன்னைவிடத் தான்பிறந்த மண்ணை, தன் இனத்தை, தன் தாய்மொழியை நேசித்தவன், தீரன் திலீபன் என்பதை யாரும் மறுக்க முடியாதபடி எதனையும் எதிர்பார்க்காமல் செய்து விட்டான் அவன். யாருமே எதிர்பாராமலே செய்து விட்டான்.

எதனையும் எதிர்பாராமல் செய்வதுதான் தியாகம் என்பதனை அவன் எப்பொழுது அறிந்திருந்தானோ?

திலீபா!

''இந்த மண்ணும் கடலும் வானும் மறைந்து முடிந்தாலும் மறக்க முடியாதடா உனது நினைவைப் பிரிக்க முடியாதடா'' என்றொரு குரல் எங்கும் பரவிக் கேட்கிறது.

திலீபன் எங்குமே போகவில்லை அவன் எமது அன்னைகளின் அன்புக் கரங்களில் இன்னும் பச்சைக் குழந்தையாக இன்னும் இளமை மிடுக்குடன் பசுவமாய்ப் படுத்திருக்கிறான் அவன் தமிழ் அன்னைகளின் அரவணைப்பில் இருக்கும் சொந்த மகன்.

## மணியம் தோட்டப் பகுதியில் பொம்மர், ஹெலி தாக்கு

யாழ்ப்பாணம், செப். 21
கொழும்புத்துறை மணியந் தோட்டப் பகுதியில் பொம்மர்களும், ஹெலியும் நேற்று முன்தினம் தாக்குதல்களை மேற்கொண்டன.

மதியம் 1.30 மணி அளவில் வந்த பொம்மர் ஒன்று கலிபர் தாக்குதலை மேற்கொண்டு விட்டு சென்றது. பின்னர் பிற்பகல் 3.30 மணியளவில் வந்து இரு பொம்மர்கள் மணியந் தோட்டப் பகுதியில் பொது மக்கள் கூடிநின்ற இடத்துக்கு அருகில் றொக்கட் தாக்குதலை மேற்கொண்டதுடன் கலிபர் தாக்குதலையும் நடத்தின. கடற்படைப்படகு ஒன்றும் 2 பீரங்கிக் குண்டுகளை ஏவியது. அவையும் அப்பகுதிக்கு அண்மையில் வீழ்ந்து வெடித்தன.

எனினும் மக்கள் பதுங்கு குழிகளுள் பதுங்கிக்கொண்டதால் உயிரிழப்புகள் தவிர்க்கப் பட்டன.

(இ-6)

## சைவ முன்னேற்றக் கழகம் அகதிகளுக்குநிவாரணஉதவி

யாழ் - மாவட்டத்தில் அகதிகளாக உள்ளவர்களுக்கு உணவுப் பொருள்களை வழங்க கொழும்பு சைவ முன்னேற்றக் கழகம் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

பேலியகொடை சைவ முன்னேற்றச் சங்கமும், கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கமும் இணைந்து சேகரித்துள்ள இந்த உணவுப் பொருள்கள் இரண்டு லொறிகளில் கொண்டுவரப்பட உள்ளன.

தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவஸ்தானம், நல்லை ஆதீனம் ஆகியனவூடாக இவை வழங்கப்படவிருக்கின்றன.

(இ-3)

## ஆசிரியர் சம்பளம்

யாழ்ப்பாணம், செப். 21
யாழ். மாவட்டப் பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்கள், ஊழியர்கள், பயிற்சிக் கலாசாலை ஆசிரியர்கள் ஆகியோருக்கான ஆகஸ்ட் மாதத்திற்கான சம்பளக் காசோலைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

(இ-6)

## அம்பாறை மாவட்டத்தில் சுகாதார வசதிகள் சீர்கேடு

அம்பாறை, செப் 21
கடந்த மூன்று மாதகாலமாக நிலவும் அமைதியின்மையால், அம்பாறை மாவட்டத்தின் சுகாதார வசதிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் பல வகையான தொற்று நோய்கள் பரவ ஆரம்பித்துள்ளன.

குப்பை, கூளங்கள் அகற்றப்படாததும் நுளம்புகள், ஈக்கள் பெருகி உள்ளதுமே இந்த நிலைக்கு காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மூன்று மாதங்களாக குடிதண்ணீரைச் சுத்திகரிக்கும் 'குளோரீன்' நுளம்புகளை அழிக்கும் மலத்தியோன் எதுவும் அனுப்பி வைக்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

[இ-6]

## நற்கருணை ஆராதனை

யாழ்ப்பாணம், செப். 21
தென் இந்திய திருச்சபை யாழ் மறை மாவட்டத்தின் முன்னாள் பேராயர் மகாகனம் சபாபதி குலேந்திரனின் 90 ஆவது பிறந்த தினம் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படுகிறது.

அன்றைய தினம் காலை 7.30 மணிக்கு வட்டுக்கோட்டைப் பேராலயத்தில் ஒரு விசேஷ நன்றி தெரிவிக்கும் நற்கருணை ஆராதனை பேராயர் மகாகனம் டி. கே. அம்பலவாணரால் நடத்தப் படும்.

(இ)

# மட்டக்களப்பு அகதி முகாம்களில் மிக மோசமான நிலை

மட்டக்களப்பு, செப். 21
மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 68 அகதி முகாம்களில் 25 ஆயிரத்து 337 குடும்பங்களைச் சேர்ந்த 1 லட்சத்து 33 ஆயிரத்து 754 பேர் தங்கி உள்ளனர்.

முகாம்களில் குடிதண்ணீர் பிரச்சினை, இடநெருக்கடி, மலசலகூட வசதியின்மை ஆகிய பிரச்சினைகள் நிலவுவதால் அகதிகள் பெரும் இக்கட்டான நிலையில் வாழ்ந்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அகதி முகாம்களுக்கு கிராம சேவை அலுவலர்கள் பொறுப்பாக முழு நேர சேவையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

எனினும் முகாம்களில் கிராமசேவை அலுவலர்கள் ஒரு சில மணித்தியாலங்கள் மட்டுமே கடமை ஆற்றுகின்றனர் என்று கூறப்படுகிறது.

மட்டக்களப்பு அகதி முகாம்களில் மருத்துவ வசதி எதுவும் இல்லை. வைத்திய அதிகாரிகள் வருகை தந்து சிகிச்சை அளிப்பதும் இல்லை. தொற்று நோய் தடுப்பு நடவடிக்கை எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

மழைக்காலம் ஆரம்பமானால் அகதிகள் நிலைமை மேலும் மோசமடையலாம் என்று அஞ்சப்படுகிறது.

[இ]

## விவரம் அறிய வசதி

மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் உள்ள இறந்தவர்களின் விவரங்களைப் பெற யாழ்-செஞ்சிலுவைச் சங்கம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

மானிப்பாயில் உள்ள சங்க அலுவலகத்தில், விவரம் பெறுவதற்காக படிவத்தை நிரப்பிக் கொடுக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுன்னாகம் தபாலகம் 24 மணி நேரமும் இயங்கும்

கொழும்பிலிருந்து வந்த தபால் பொதிகளை உரிய தபாலகங்களுக்குஒப்படைப்பதற்காகவும் -

கொழும்புக்கும், பிறமாவட்டங்களுக்கும் அனுப்பவேண்டிய தபால்களைப் பொறுப்பேற்பதற்காகவும் சுன்னாகம் தபாலகம் 24 மணி நேரமும் திறந்திருக்கும்.

சுன்னாகம் தபால் அதிபர் தி. இ திருநாவுக்கரசு இத்தகவலைத் தெரிவித்தார்.

இதேவேளை கொழும்பிலிருந்து கப்பல்மூலம் அனுப்பிவைக்கப்பட்ட 215 தபால் பொதிகள் நேற்று சுன்னாகம் தபாலகத்துக்கு எடுத்துவரப்பட்டன.

இந்தப் பொதிகளை சம்பந்தப்பட்ட தபாலகங்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பொதிளை உரிய தபால் அதிபர்கள் உடன் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். மாவட்ட தபால் அத்தியட்சகர் திரு. கே. கனகசுந்தரம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பு மற்றும் பிற மாவட்டங்களுக்கு அனுப்பப்படவேண்டிய தபாலகளை உடனுக்குடன் சுன்னைகம் தபாலகத்தில் இயங்கும் யாழ் தபால் தரம் பிரிக்கும் பிரிவில் ஒப்படைக்கும்படியும் கேட்கப்பட்டிருக்கிறது. [உ-89]

## அல்லைப்பிட்டிப் பகுதிக்குள் 'புதியவர்கள்' செல்லத்தடை!

யாழ்ப்பாணம், செப் 21

அல்லைப்பிட்டிப் பகுதிக்குள் ''புதியவர்கள்'' உட்செல்ல இராணுவம் அனுமதி மறுத்துள்ளது மீறி உட்செல்பவர்கள் சுடப்படுவர் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அல்லைப்பிட்டியிலிருந்து பிறஇடங்களுக்குஇடம் பெயர்ந்து அகதி முகாம்களில் தங்கியுள்ள மக்கள் தமது வீடுகளைப் பார்வையிடச் சென்றபோதே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் தமது வளவுகளுக்குள் தேங்காய் சேகரிக்கச் சென்ற மூவர் இராணுவத்தினரிடம் சிக்கிக் கொண்டனர். அங்கு அவர்கள் நையப் புடைக்கப்பட்டனர்.

பின்னர் ஒருவர் விடுவிக்கப்பட்டார். மற்றைய இருவரின் நிலை என்ன என்பது இதுவரை தெரியவில்லை.

இதேவேளை —

அல்லைப்பிட்டிப் பகுதியில் தொடர்ந்தும் இராணுவத்தினரால் வீடுகள், வேலிகள் எரிக்கப்பட்டு வருவதாக அங்கிருந்து வந்தவர்களால் தெரிவிக்கப்பட்டது. (ஒ-15)


## அறிவித்தல்

பொதுமக்களின் நலன் கருதி
இல. 6 பலாலி வீதி, திருநெல்வேலி சந்தியில்
அமைந்துள்ள ஸ்தாபனத்தில்
வெளிநாட்டு நாணயம்
மாற்றிக் கொடுக்க ஒழுங்குகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதை மகிழ்வுடன் அறியத் தருகிறோம்.
(14239)


## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி இராசரட்ணம் (இராசையா)

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும், கொழும்பு S. V. S & கொம்பனியின் உரிமையாளருமாகிய சின்னத்தம்பி இராசரட்ணம் புதன்கிழமை (19 - 09 - 90) அன்று காலமானார். இவர் சின்னத்தம்பி வள்ளியம்மையின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், பர்வதத்தின் அன்பு மருமகனும, ஜெகநாதன், விஜயகுமார், இராஜகுமார், மகாலட்சுமி, சிவகுமார் (4 ஆம் வருட மருத்துவபீட மாணவன்), விஜயலட்சுமி, காலஞ்சென்ற ஜெயலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr. வசந்தகுமார், இந்திராணி, கௌரி, வசந்தமாலா, Dr. விக்கினேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சஞ்ஜீவன், வினோஜா, பிரசன்னா, சுலக்சனா, ஷாலினி, சுலோஜனா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சிவகுரு சின்னத்துரை (ஆசிரியர்), அன்னம்மா, சோதிப்பிள்ளை, இரத்தனம், காலஞ்சென்ற துரைச்சாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்லத்துரை, பொன்னுத்துரை, இராசையா, இராசலிங்கம், திருமதி நடராஜா நாகம்மா, காலஞ்சென்றவர்களான நல்லதம்பி, சோமசுந்தரம், கனகரெத்தினம், முத்துலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் சனிக்கிழமை (22 - 09 - 90) கோம்பையன் மணல் மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
டாக்டர். வசந்தகுமார்.
117. சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை.
(14241)

# ஐ. நா. அதிகாரிகளுக்கு யாழ். வர அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், செப். 21

ஐ.நா. அகதிகள் ஸ்தானிகராலயத்தால் யாழ் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட புனர்வாழ்வுத் திட்டங்களில் ஏற்பட்டுள்ள சேதங்களைப் பார்வையிட்டு நிவாரணம் வழங்க கொழும்பு, ஜெனிவா அதிகாரிகள் நேரில் வர அரசு அனுமதி மறுத்துள்ளது.

ஐ. நா அகதிகள் ஸ்தானிகராலயம் வீடமைப்புத் திட்டம் உட்பட பல்வேறு புனர்வாழ்வுத் திட்டங்களை யாழ் மாவட்டத்தில் செயற்படுத்தி வந்தது.

இந்த அமைப்பால் அமைக்கப்பட்ட வீடுகளில் கொட்டடியில் 20 வீடுகளும் மாதகலில் 15 வீடுகளும் மயிலிட்டியில் 10 வீடுகளும், ஸ்ரீலங்கா படையால் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

அதே வேளை, இந்த அமைப்பால் தீவுப்பகுதி பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட தண்ணீர் பவுசரும், டிராக்டரும் ஸ்ரீலங்கா படையினரால் எரிக்கப்பட்டன.

இந்தச் சேதங்கள், மற்றும் அமைப்பின் யாழ்ப்பாண அலுவலக சேதம் சம்பந்தமான விவரங்கள் அடங்கிய அறிக்கை கொழும்பு அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

ஜெனிவாவில் இயங்கும் தலைமையகத்துக்கு இந்த விடயங்கள் குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சேதங்களை நேரில் பார்வையிட கொழும்பு அதிகாரிகளும், ஜெனிவா அதிகாரிகளும் அரசிடம் அனுமதி கோரியிருந்தனர்.

ஆனால் இங்கு செல்ல அனுமதிக்க முடியாது என்றும், இங்கு பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லை என்றும் அரசு அவர்களுக்கு பதில் அளித்துள்ளது, (இ-3-6)

## புத்தளத்திற்கு வடக்கே 40 சிங்களவர் கொலை!

கொழும்பு, செப். 21

புத்தளம் மாவட்டத்தில் வடக்கே உள்ள வெலிமுந்தல் கிராமத்தில் கடந்த புதன் இரவு 40 சிங்கள மீனவர்கள் இனந்தெரியாத ஆயுதக் கோஷ்டி ஒன்றினால் வெட்டியும் சுட்டும் கொல்லப்பட்டனர் என்று பாதுகாப்பு அமைச்சு நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

அத்தாக்குதலில் உயிர் தப்பிய ஆறு மீனவர்கள் அருகில் உள்ள இராணுவ முகாமுக்குச் சென்று தகவல் தெரிவித்ததைத் தொடர்ந்து, அங்கு படையினர் விரைந்து சென்றனர் என்றும் பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையில் கூறப்பட்டது.

அப் பகுதிக்கு ஊர்காவல் படையினர் அனுப்பி வைக்கப்பட்டதாகக்கூறிய பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிரில் ரணதுங்க, கிராமவாசிகளுக்கும் தற்காப்புக்காக ஆயுதங்களும் கைக்குண்டுகளும் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார். (உ-எ)

## குஜ்ரால் - ரஞ்சன் பேச்சு

அண்மையில் அம்ஸ்ரடாம் விமான நிலையத்தில் வைத்து இந்திய வெளியுறவு அமைச்சர் இந்தர்குமார் குஜ்ராலை இலங்கை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இத்தகவலை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவே நேற்று வாராந்த செய்தியாளர் மாநாட்டில் வைத்து வெளியிட்டார்.

அண்மையில் சர்வதேச மாநாடு ஒன்றில் கலந்து கொள்வதற்காக தான் சென்றிருந்தபோது இந்தச் சந்திப்பு நிகழ்ந்ததாகவும்—

வடக்கு - கிழக்கு யுத்தம் குறித்தும் விடுதலைப் புலிகள் குறித்தும் தாம் குஜ்ராலுடன் பேசியதாகவும் அவர் சொன்னார். (உ-எ

## திலீபனுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், செப். 21

ஆறாவதுநாளாக நேற்று தியாகி திலீபனின் நினைவஞ்சலி நிகழ்ச்சி குடாநாடு முழுவதும் அனுஷ்டிக்கப்பட்டது.

தியாகி திலீபனின் உருவப்படம் தாங்கிய மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட இரதங்கள் நேற்று வீதிவலம் வந்தன.

கிராமங்கள் பட்டினங்கள் தோறும் சிற்றூரவைகள் — வட்டஅவைகளின் ஊடாக தியாகி திலீபனின் நினைவு தின வைபவங்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. (ஒ-71)

## தபாலக ஊழியருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், செப். 21

அச்சுவேலி தபால் நிலையத்தில் தற்காலிகமாக இயங்கிவந்த வயாவிளான் தபாலலகம் தற்போது புன்னாலைக்கட்டுவன் உபதபால் நிலையத்துக்கு முன்பாகவுள்ள வீடு ஒன்றிற்கு மாற்றப்பட்டுள்ளது.

வயாவிளான் தபாலக ஊழியர்கள் அனைவரையும் இன்று காலை 9 மணிக்கு புதிய அலுவலகத்திற்குச் சமுகம் தரும்படி பிராந்திய தபால் அத்தியட்சகர் கேட்டுள்ளார். [உ]

## 'திரு' மீது ஜெயலலிதா வழக்கு

சென்னை, செப். 21

போட்டி அ. தி. மு. க. பொதுச் செயலாளர் திருநாவுக்கரசு மற்றும் முரசொலி செல்வம்மீது அ. தி. மு. க. பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதா சென்னை நீதிமன்றம் ஒன்றில் மானநஷ்ட வழக்கு ஒன்றைத் தாக்குதல் செய்திருக்கிறார்.

தாம் எழுதியதாகக் கூறி, திருநாவுக்கரசு வெளியிட்ட கடிதம் ஒன்று தனதுதனிப் பட்டவாழ்க்கையைவிமர்சிப்பதாகஅமைந்துள்ளது என்றும் [illegible] ஜெயலலிதா மனுவில் தெரிவித்துள்ளார். (அ-எ)

## ரூ. 1500க்கு மேல் வருமானம் பெறும் அரச ஊழியர்களுக்கும் நிவாரணம் வழங்க முயற்சி

யாழ்ப்பாணம், செப். 21

மாதாந்தம் ஆயிரத்து 500 ரூபாவுக்கு மேல் வருமானம் பெறும் அரச ஊழியர்களுக்கும் நிவாரணம் வழங்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் இத்தகவலைத் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்த, வருமானம் இழந்தவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணம் ஆயிரத்து 500 ரூபாவுக்கு மேல் வருமானம் பெறும் அரச ஊழியர்களுக்கு வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. [உ-3.5

## தேங்காய்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு பால்மா வகை எதுவும் இல்லாமல் தாய்மார் படும் பாடு சொல்லுந்தரமன்று.

இந்த நிலை நீடித்தால் பட்டினிச் சாவுகள் அதிகரிக்கும் என்று அஞ்சப்பட்ட வேளையில்—

செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் 'சிகிரியா' என்ற சிறு கப்பல் மா, சீனி மற்றும் பாவனைப் பொருள்களுடன் நெடுந்தீவுக்கு இம் மாதம் 17ஆம் திகதி வந்து சேர்ந்தது!

அந்தக் கப்பல் மக்களுக்குப் பெரும் ஆறுதலைத் தந்தது. சுமார் 35 வருடங்களுக்கு முன்னர் ஊர்காவற்றுறை எம். பியாக திரு. அல்பிரட் தம்பிஐயா இருந்த காலத்தில் நெடுந்தீவுக்கு கப்பல் மூலம் உணவுப் பொருள் வந்த பின்னர் இப்போது தான் முதற் தடவையாக மீண்டும் கப்பலில் உணவு வந்துள்ளது.

செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த திரு. எஸ். சுவர்ணராஜா கப்பலில் கொண்டு வரப்பட்ட உணவுப் பொருள்களை நெடுந்தீவு உதவி அரச அதிபர் பணிமனை அலுவலரிடம் கையளித்தார். (அ-111)

## கான்ஸ்டபிள் மரணம்

அண்மையில் யாழ். கோட்டை மீது நடத்தப்பட்ட தாக்குதலின்போது கோட்டைக்குள் இருந்த தமிழ் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் உயிரிழந்ததாகத் தெரிய வருகிறது,

சித்தன்கேணி கலைநகரைச் சேர்ந்த குணரத்தினம் இருசியலிங்கம் என்ற கான்ஸ்டபிளே உயிரிழந்தவராவா [உ-161]

## சவளக்கடையில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சுட்டுக் கொன்றதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதே சமயம்—

சவளக்கடைப் பகுதியில் கோயில்கள் மற்றும் பாடசாலைகளில் தஞ்சம் புகுந்திருந்த 35 தமிழ் பெண்களை இராணுவத்தினரும் முஸ்லிம் ஊர்காவல் படையினரும் கடந்த செவ்வாயன்று கைது செய்து கொண்டு சென்று பாலியல் வன்முறைக்கு உட்படுத்தினர் என்றும்—

இந்தப் பெண்கள் தற்போது தப்பி வந்து மண்டூரில் தஞ்சம் புகுந்திருக்கின்றனர் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. [உ-5]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 229/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 21-09-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org